***DEPOSITION OF WITNESS***
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,
PUDUKKOTTAI.
**OS.No.21 /2012**

D.W.1 திரு.முகமது அஸ்ரி த/பெ.அப்துல் காதர் நாள் – 04.08.2025.

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1997–ம் வருடத்தில் பாகமுச்சலிக்கா தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதன் அசல் என்னிடம் உள்ளதா என்றால் அதன் அசல் என்னிடம் இல்லை, எங்கு உள்ளது என்று எனக்கு தெரியாது. 1997 பாகமுச்சலிக்காவிற்கு பின்னிட்டு தான் ஷேக் பீவி இறந்துபோனார் என்றால் சரிதான். 1997 ல் ஏற்பட்டதாக சொல்லும் பாகப்பிரிவினையின் அடிப்படையில் அனுபவித்து வந்தார்கள் என்று எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது பாட்டி இறந்ததற்கு பின்னிட்டு அவருக்கு பிரிந்த சொத்து மீண்டும் பிரிக்கப்பட வேண்டியது தான் என்றால் சரியல்ல , அவர் எனது அத்தை மர்ஜான் பேகம் என்பவருக்கு கொடுத்துவிட்டார் , அந்த சொத்தை மர்ஜான் பேகம் விற்றுவிட்டார். எனது பாட்டி மர்ஜான் பேகத்திற்கு கொடுத்ததற்கும் , மர்ஜான் பேகம் விற்றதற்கும் ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் அதன் நகல் என்னிடம் உள்ளது . என் தந்தையார் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் எந்தெந்த சொத்துக்கள் யார் யாருக்கு வழங்கப்பட்டது என்றும், அதன் அடையாளம் குறிப்பிடப்பட்டதா என்றால் இல்லை . எங்களது கட்சியின்படி வாதிக்கும், எனது தந்தையார் 1–ம் பிரதிவாதிக்கும் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்பது தான் என்றால் சரிதான் . எங்களது கட்சியின்படியே எனது பாட்டி இறந்ததற்கு பின்னிட்டு தாவா சொத்துக்கள் மீண்டும் பிரிக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல, ஏற்கனவே

எனது பாட்டிக்கு ஒதுக்கப்பட்ட சொத்து , மர்ஜான் பேகத்திற்கு கொடுத்துவிட்டார்கள்.

எங்களது எதிர்வழக்குரையில் இந்த விவரம் குறித்து சொல்லியிருக்கிறேனா என்றால் அதில் சொல்லப்படவில்லை , நான் அந்த எதிர்வழக்குரையை தாக்கல் செய்யவில்லை , அதனை என் அப்பா தாக்கல் செய்துள்ளார்.

எனது தந்தையார் 1–ம் பிரதிவாதி, 2–ம் பிரதிவாதியின் பொது அதிகார முகவராக இருந்து ஒரு சொத்தை கிரயம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். நான் B.Sc., Honrs மலேசியாவில் படித்தேன், அது இந்தியாவில் B.E., பட்டப்படிப்பிற்கு சமமானதாகும். என் பெற்றோர்களின் வங்கி கணக்கு புத்தகம் நான் பார்த்தேனா என்றால் பார்த்திருக்கிறேன் . எனது தாயார் , எனது தந்தையாருக்கு எந்த வங்கி கணக்கில் இருந்து பணம் எடுத்துக்கொடுத்தார் என்றால் அவர் வைத்திருந்த நகைகளை விற்று பணம் கொடுத்தார் . யாரிடம் விற்றார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் ஞாபகமில்லை, எனக்கு அப்போது 11 வயது தான் இருக்கும், என் அப்பா, அம்மா சொல்லி தான் தெரியும் . சுமார் 70 முதல் 100 பவுன் இருக்கும் என்று சொன்னார்கள். எந்த ஊரில் விற்றார்கள் என்று எனக்கு தெரியாது. என் அம்மா, என் அப்பாவிற்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனது அத்தைக்கு வழக்கு சொத்துக்களில் பங்கு உண்டு என்பது தான் என்னுடைய கட்சி என்றால் சரிதான் . இந்த வழக்கில் வாதி தாக்கல் செய்துள்ள சொத்துக்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் . எனது அப்பாவின் எதிர்வழக்குரைப்படி

வழக்கு சொத்துக்களில் யார் யாருக்கு எந்தெந்த அயிட்ட சொத்துக்களில் பாகம் உள்ளது என்று சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார் . அதுபோல் குறிப்பான விவரங்கள் எனது அப்பா தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் இல்லை என்றால் சரியல்ல . எனது தாத்தா அல்லாபிச்சை ராவுத்தர் மலேசியாவில் என்ன வேலை செய்தார் என்றால் வியாபார் செய்தததாக சொன்னார்கள், என்ன வியாபாரம் என்று எனக்கு தெரியவில்லை. நான் 1985ல் பிறந்தேன். தாவா சொத்துக்களைப் பொறுத்து என்னிடம் என் பெற்றோர்கள் சொன்னார்கள் என்றால் எனக்கு சுமார் 20, 23 வயதில் சொன்னார்கள். அதற்கு முன்பு விவரங்கள் நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை என்றால் அவர்கள் சொல்லவில்லை , அதனால் தெரிந்து கொள்ளவில்லை . வாதிக்கு வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல . நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் தாயாரின் தனித்த உரிமையிலும் , பாத்தியத்திலும், B–அட்டவணை சொத்துக்களை பொறுத்து காட்டக்கூடியவைகள் அல்ல என்றால் சரியல்ல . அம்பிகாபிரசாத் என்பவரிடமிருந்து என் தாயார் கிரயம் வாங்கியுள்ளதற்கு எவ்வாறு பணம் ஏற்பாடு செய்தார் என்றால் எனது தாயார் இறுதிக்காலம் வரை தையல் தொழில் செய்து வந்தார், நகைகள் வைத்திருந்தார் அவைகளை வைத்து கிரயம் வாங்கியிருந்தார். சிறுவாட்டு பணம் வைத்திருந்ததாக சொன்னார். தையல் தொழில் மூலமாக என் தாயாருக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றால் எனக்கு தெரியாது . எனது தாயாருக்கு எவ்வளவு நகைகள் போடப்பட்டது என்று என் பிரமாணவாக்குமூலத்தில் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் இல்லை. என் தாயாருக்கு தனிப்பட்ட வருமானம் எதுமவும் கிடையாது என்றும் , வழக்கிற்காக நான் தற்போது

பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . எனக்கு நினைவு தெரிந்து என் அப்பா எப்போது மலேசியா சென்று வந்தார் என்றால் எனக்கு 2 வயது இருக்கும் போதும் , அதற்கு முன்னரும் சென்று வந்தார் . என் தாத்தாவின் தொழிலை தான் என் அப்பா செய்து வந்தார் என்றும் , அந்த பணத்தை கொண்டு தான் என் தாயார் பெயரில் கிரயங்கள் வாங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல . இஸ்லாமிய சட்டத்தின்படி பகுதி பாகப்பிரிவினைக்கு இடமுண்டு என்றும் , அதனால் இந்த வழக்கு சொத்துக்களில் வாதிக்கு பாகம் இல்லை என்று கட்சி செய்ய முடியாது என்றால் சரியல்ல. என் தாயார் செய்துள்ள கிரயங்கள் சட்டப்படி வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by me in open court*
*read over to the witnesses and*
*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*